உ
"வெற்றி"

மனத்தை நெகிழவைக்கும் மாண்புறு மாக்கதைகள் - I

அடித்ததே......

# "ஆராய்ச்சிமணி"



## நீதி தவறாத நிருபன்

கதை பண்ணுவோம்
(வாசிப்புக்கும் வளமான கதாப்பிரசங்கக்கலைபயிலுகைக்குமான
சிறுவர் இலக்கியம்




"கலாபூஷணம்" **எம்.எஸ்.ஸ்ரீதயாளன்** (புலவர்)
கதாபிரசங்கவித்தகர், இளையவாரியார், கானதமிழ்மணி
தெகிவளை
0112 738 069 / 0714 312 070

## கதாப்பிரசங்கம் "ஆராய்ச்சிமணி"

## முகவுரை

புராண, இதிகாச, நீதிக்கதைகளை சிறிய நூல்களாக வடிவமைத்து வாசித்து மகிழ்ந்தறிவதற்காக மட்டுமின்றி அதன்பயன்கருதி பேச்சாற்றல் பயிற்சிக்கும் உகந்த முறையில் ஆக்கித் தருவதில் நிறைவெய்துகிறேன்!

இன்று வளர்ந்து வரும் தமிழ்ச்சிறார்கள், அறிவும் கல்வியும் சிறந்து, கலைகளிலும் கைந்தேர்ந்தவராக ஆற்றல் பெற விரும்பி, அரிய நூல்களைத் தேடுகிறார்கள். பண்டைய வரலாறு, இலக்கிய, புராண விடயங்களை அறிய ஆவல் கொள்கிறார்கள். பேச விரும்புகிறார்கள். மொழி ஆளுமையோடு கம்பீரமடைகிறார்கள். மேடைப்பேச்சுத் திறமையோடு "கதாப்பிரசங்கம்" என்ற தெய்வீகக் கலைபயில மாணவநிலையிலேயே பலர் ஆர்வத்தோடு முந்துகிறார்கள். அறநெறிப்பாடசாலைகள், தமிழ்வளர்ச்சி நிறுவனங்கள், அரச சமய திணைக்களங்கள், ஆலயங்கள் பாடசாலைகளிளெல்லாம் புதிய உத்வேகம். பாடசாலைகளில் போட்டிகள், பேச்சு ஆற்றுகைக்கும், தெளிவான மொழி உரையாடல்களுக்கும், போதிய தமிழ் நூற்பயிற்சியும், கொஞ்சம் முயற்சியும் அவசியமல்லவா?
கதாப்பிரசங்கம் பற்றிய தேடலுக்கு இவ்வகையான சிறிய கதை நூல்களை புராண, இதிகாச வரலாறுகளை அதிகம் படிக்க வேண்டும். இவை வெறும் கதைகள் மட்டுமா? எவ்வளவு விடயஞானத்தை விழுமியங்களை, பண்புசார் விருத்திகளை, படிப்பினைகளையுமல்லவா தருகின்றன? வாசிக்கும் ஆற்றலைத்தூண்டி தொடர்ந்து வாசிக்க அறிவும் விரியும்.

### தொண்டர் பெருமை

கருங்கடலைக் கைநீத்துக் கொளவெளிது, முந்நீர்க்
கடற்கரையின் நொய்மணலை எண்ணி அளவிடலாம்
பெருங்கடன்மேல் வருந்திரையை ஒன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிட லாகும்
தருங்கடலின் மீனை அளவிடலாகும் வானத்
தாரகையை அளவிடலாம் சங்கரன்தாள் தமது
சிரங்கொள் திருத் தொண்டர்புரா ணத்தைஅளவிட நம்
சேக்கிழார்க் கெளிதல்லது தேவர்க்கும் அரிதே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய்மலந்தருளிய ஏழாவது தெய்வத் திருமுறையில் வரும் பதிகமொன்று திருத்தொண்டர்தொகை. அது "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்.." என்ற முதற்பாலோடு தொடங்குகின்றது. திருத்தொண்டர்தொகையே சேக்கிழார் பெருமான், அற்புதமான— பக்திச்சுவை நனி சொட்டும் பெரியபுராணம் தோன்றுவதற்கு அடிப்படையான முதல்நூல்; வழிநூல் நம்பியாண்டார் நம்பியருளிய திருத்தொண்டர் திருவந்தாதி, பெரியபுராணத்தின் முதநூலாம் பதிகம் தோன்றுவதற்கு தவம் புரிந்த திருத்தலம் திருவாரூர். சைவக்காப்பியமாம் திருத்தொண்டர் புராணத்தை அருள வந்த சேக்கிழார் பெருமான் அத்திருவாரூரின் தலச்சிறப்பைக் கூறியே தம் காவிய நூலை ஆக்குவதற்கு அணியாக "மனுநீதிகண்ட புராணத்தை தம் நூலுக்கு முதல் கதையாக்க கூறுகிறார். நெஞ்சை உருக்கும் அற்புதமான அவ்வரலாறே இங்கு "ஆராய்ச்சி மணி"என்ற பெயரில் உங்களுக்காக இலகுநடையில் கதாருபமாக வருகிறது.

முதலில், கதாப்பிரசங்கம் என்பது, - கலைஅறிமுகம் பற்றிய பகுதியைப் படித்துவிட்டு, தொடர்ந்து இப்புராணக்கதை நிகழ்ச்சிகளில் ஆற்றுகைக்கு எப்படிப்பொருத்தமாக அமைகிறது என்பதை நீங்களே உரியமுறையில் செய்து பாருங்கள். வாருங்கள் உள்ளே....

புராண வரலாறுகளை இவ்விதம் நாடகமுறைமைப் பாணியில் அமைத்துக் கொண்டு, தேவையான இடத்தில் பொருத்தமாக மேடைப்பேச்சாக, இசைச்சொற்பொழிவாக, நாடகமாக ஏன் வில்லிசையாக பாடமுடியுமென்பதை இக்கதையை வாசிக்கும் போதே நீங்கள் புரிந்து கொள்வீர்கள். வாருங்கள், இனி கதைசொல்லக் கேட்போம்.

- ஆசிரியர் -

## கற்கலாம் வாங்க !

# கதாப்பிரசங்கம் என்னும் கவினுறு கலையை அறிவோமா?

பேசவேண்டும்: சிறப்பாகபேசவேண்டும்: சிறந்தபேச்சாளராகவரவேண்டும் என்ற முனைப்பு மாத்திரம் தோன்றிவிட்டால் அதற்கான முயற்சிகளில் ஈடுபடும்போது சுறுசுறுப்பும் தானாகவே வந்துவிடும். ஒருமுறை பேச்சின் சுவையை உணர்ந்துவிட்டீர்களாயின் பிறகு தொடர்ந்து பேசுவதென்பது ஓர் இனிமையான அனுபவமாகி, மேலும் மேலும் பேசத்தூண்டுகிறது'' பேச்சுக்கலையிலே எமக்கு முதலில் ஏற்படும் விருப்பு என்பதைச் சொல்ல விரும்புகின்றேன். பேச்சுக்கலையில் எமக்கு ஏற்படும் விருப்பும் ஆர்வமுமே முக்கியம். அதுவே ஒரு முனைப்பாகி- அதில் மேலும் முயலவேண்டும் என்ற ஆவலை எம்மிடத்து ஏற்படுத்தி வெகுதூரம் கொண்டுவந்து சேர்த்துவிடும்.

பேச்சுவன்மை என்னும் ஆக்கமிகு சக்தியை ஒருவன் பெற்றிருப்பாயின் அந்த சக்தியானது மனிதனுக்கு கிடைக்கும் மற்றெல்லா நலன்களையும் விட மேலானது: உண்மையானது: கீர்த்தியும ஆளுமையும் தரவல்லது.

இந்த கருத்தில்தான்,

**"சொலல் வல்லன் சோவ்விலான் அஞ்சான் அவனை**

**இகல்வெல்லல் யார்க்கும் அரிது"** என்று திருவள்ளுவர். குறிபிட்டுள்ளார் என்பதை நினைவிலிறுத்தி முயலுங்கள்.

இது சபையானது விரும்பியேற்கும் சிறந்த பேச்சாளராக நீங்கள் வர இது முதற்படி. அர்த்தமுடைய பேச்சு அறிவுடன் சேரும், இதயம் கவரும் இசையோ ஆன்மாவுடன் சேரும். இரண்டும் கலந்ததுவே இசைச்சொற்பொழிவாகிய கதாப்பிரசங்கம்.

"தான் பேசுகின்ற விடயத்தில் ஞானமும், பேசுகின்ற மொழியில் சரளமும், சொல்லாட்சித் திறனும், ஒழுங்கான உச்சரிப்பும், தெளிவான குரலும், பேசும் பாணியில் தேவையான ஏற்ற இறக்கமும், சபையுணர்ந்து பேசும் இலாவகமும், மேடைநம்பிக்கையும் கொண்ட எவரும் சிறந்த பேச்சாளராக முடியும்" பேசுபவரிடத்தில் ஓரளவு பாடுகின்ற ஆற்றலும் இசைஞானமும் கைவந்துவிடுமானால் கேட்கவா வேண்டும்? மேலாக அவ்வப்போது வெளிப்படும் அங்கஅசைவுகள் அபிநயம் ஆகிய இத்திறமைகள் கொண்ட ஒருவனை சபையானது தம் உள்ளங்கவர்ந்த பேச்சாளராக ஏற்றுக்கொள்ள தயங்கமாட்டாது என்பது உண்மை.

நம் முன்னோர் முழுப்பழத்தையுமே சாப்பிட்டார்கள், அடுத்து வந்தவர்கள் பழத்தின் பகுதியை மட்டும் உண்ணடார்கள்: இப்போது இருப்பவர்களோ பழச்சாற்றைமாத்திரமே அருந்துகிறார்கள். மூலநூல்கள் தரும் செய்திகளையும், சிந்தனைகளையும் தாமாகவே கரம் தற்றி படித்தும் கேட்டும்

அறிந்துக்கொள்ளமுடியாத இன்றைய தலைமுறையினர், மூலநூல்களின் வடிவத்தையே மறந்து, வெறுமனே சொற்பொழிகளை மட்டும் கேட்டுவிட்டுப் போகின்றனர். "என்ற சிந்தனையை வாரியார் சுவாமிகளே கூறியிருந்தார்"

1979களில் திருமுருக கிருபானந்தவாரியார் கொக்குவில் மஞ்ஞுவனப்பதி முருகன் ஆலயத்தில் வைத்து என்னிடம் அன்று பதிவு செய்த அந்தஅற்புதமொழிகள் இன்றும் எனக்கு பசுமையாய் இருக்கின்றன.

தயாரிப்பு இல்லாமல் எந்த விடயத்திலும் சிறப்பாகப் பேசுவது என்பது சாத்தியமான செயலல்ல" என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். பக்திச் சொற்பொழிவுகளை இசை மெருகோடு, வாரியார் கதைசெய்ய அதனை பல காலமாக, அதை, அனுபவித்து வந்த அன்பரொருவர் வாரியாரிடமே பின்வருமாறு ஒரு கேள்வி கேட்டார்.

"சுவாமி தங்களை எந்த தலைப்பில் பேசச் சொன்னாலும் தயக்கமின்றி உடனே பேசிவிடுகிறீர்களே அது எப்படி?"

அதற்கு விடையாக வாரியார் சுவாமிகளோ, தமது சிரசுப்பகுதியில் பொட்டுவிரலைச் சுட்டிக்காட்டி காண்பித்து "ஒரு தண்ணீர்தொட்டியில் நீரை முழுமையாக நிரப்பி வைத்திருந்தால் வீட்டில் எந்தக்குழாயை திறந்தாலும் தண்ணீர் கொட்டுவது இயல்புதானே? அதுபோல நல்ல நூல்களை, புதிய செய்திகளை, பாடங்களை தேடிச்சேகரித்து கற்று மூளையை நிரப்பி கொள்பவர்கள் எப்போதும் எந்த தலைப்பிலும் பேசலாம்" என்றார்.

மெய்யன்பர்களே! அதற்குத்தான் இப்படியான நூல் வாசிப்புக்கள் அவசியம் என்பேன். பொதுவாக கதாப்பிரசங்கவித்தகர்களாய் இருப்போர் முதலில் நல்ல கவர்ச்சியுள்ள பேச்சாளர்களாக இருக்க வேண்டும். மேடையைத் தம்மோடு இசைவாக்கி வைத்திருக்கக் கூடிய இலட்சணங்கள் அவரிடம்இருத்தலும் அவசியமானது என்பது மீண்டும் சொல்லியாகவேண்டிய விடயமாகும்.

பேச்சாற்றுகை அல்லது பிரசங்கித்தல் என்பது ஒரு அற்புதமான கலை. அக்கலையை வெற்றிகரமாக பயில அதற்கான விலையைக்கொடுக்கின்ற மனோபாவம் முதலில் இருக்கவேண்டும். பேச்சுவல்லபத்தோடு கலைப்பாங்காக ஒருகதையைச் செய்யும்போது அக்கதையிலுள்ள முக்கிய செய்திகளும் விழுமியங்களும் பொதுமக்களிடையே அதிகம் எடுபடுகிறது. முன்னர் போலல்லாது கதாப்பிரசங்கத்தை தேவைக்கேற்ப அரைமணிநேரம் ஒருமணிநேரத்தில் அரங்கேற்றி புகழ்பெறலாம்.

மரபுமரபாக நம் ஆலயங்களும் தமிழ்மக்களும் போற்றிவந்த இதுபோன்ற அற்புதக்கலைகள் இன்று கலைகளானது இன்றுதோன்றி நாளைமறையும் புதிய நவீன கலைகளை போல நிச்சயம் மாறி விடாது. மாறாக Stablity என்னும் Divine Arts நிலைபேறுடைய இவ்வற்புதக்கலைகளில் ஆற்றலை, நவீனசிந்தனை, விஞ்ஞானயுகம், நாகரீகபோக்கு என்ற போர்வையில் மழுங்கடிக்க முடியாது. இக்கலைகளுக்கு பொதுமக்கள் யாபேரும் ஆதரவு நல்குவதன் மூலம் கதாப்பிரசங்கம் போன்ற மரபுசார்பான நிலைபேறுடைய கலைகளை எம்மத்தியிலே வளர்த்தெடுக்க பாடுபடுவோம். பயிலுங்கள். கதாப்பிரசங்க வித்தகர்களாகுங்கள்!

## கதாப்பிரசங்கம் (கலை பற்றிய அறிமுகம்)

கதாப்பிரசங்கம் (கதை) செய்தலை தமிழகத்திலும், இலங்கையிலும் பொதுவாக கதைபண்ணுதல் என்று அழைக்கும் வழக்கம் உண்டு. உண்மையும் அது தான். இனிய (நீதி/சமயநெறிசார்) கதைகளைத் தயார்செய்து, இசைப்பாடல்களோடு இணைந்து ஆற்றுகை செய்யும் அற்புதமான பவித்திரமான கலையானகதாப்பிரசங்கம் ஆகும் இது இயலோடு, இசையும், நாடகமுறையும் சேர்ந்த **முத்தமிழ்க்கலை.**

தமிழர் பாரம்பரிய கலைமரபில் தெய்வீகச் சார்பாக எழுந்த இவ்வடிவம் சமயப்பிரசாகர்களால் மட்டுமின்றி, இளைய / புதிய தலைமுறையினாலும் ஆசையோடும் ஆர்வத்தோடும் இன்று பயிலப்படுகிறது.

கலைஅரங்குகள், தெய்வீக நிகழ்ச்சிகளில் தட்டிக்கொடுக்கப்படும் ஒரு கலையாக எழுச்சிபெறுகிறது. இந்நிலையில் கதாப்பிரசங்கம் பற்றிய ஆற்றுகைமுறைமை பற்றி சரியான விளக்கமும் வழிப்படுத்தலும் தேடும் மாணவர்க்கும், சமயப்பிரசாரர்களாய் வரவிரும்புவோர்க்கும் சுருக்கமாக ஆற்றுகை (மரபு) முறை பற்றி தெரிவிப்பதற்கும் கதைத்தெரிவுகளுக்கு வழிப்படுத்துவதற்கும் இச்சிறிய நூல் உங்கள் கைகளில் தவழ்கின்றது.

### படிமுறை (கதாப்பிரசங்க ஆற்றுகைமுறையில் ஒரு படிமுறை)

1. பொருத்தமான சிறிய புராண / இதிகாச / கதையொன்றைத் தேடிப்படித்து, நன்றாக அதைப்புரிந்து / பதித்துக் கொள்ளுதல், கதையை ஒழுங்கமைத்துக் கொள்ளல்
2. நீங்கள் நன்றாக இசைத்துப்பாடக் கூடியதும், பொருத்தமானதுமான கீர்த்தனை - சாகித்தியங்கள் /பாடல்கள் / திருமுறைகளை தயார்படுத்தி வைத்திருத்தல்.
3. கட்டாயமாக ஒரு சுருதிப்பெட்டி, தம்புரா அல்லது இலக்ரோணிக் சுருதியை பக்கத்தில் வைத்துக் கொண்டு சுருதி பிசகாமல் பேசியும் / பாடியும் பயிலல். தாளத்தைக் கவனித்தல்.
4. மிருதங்கம் - தபேலா - டோல்கி - வயலின் - புல்லாங்குழல் - ஆர்மோனியம் - கஞ்சிரா – கீபோட் இவற்றில் சுருதிக்கும் / லயப்பிடிப்புக்குமாக இரண்டு வாத்தியங்களையும் பக்கவாத்தியமாகப் பாவித்தல்.
5. நீங்கள் பாடும் பாட்டுக்களுக்கு அனுசரணனை செய்ய ஒரு (இசை / சங்கீத அறிவு உள்ள) பிற்பாட்டுக்காரரை தேவையானவிடத்து நியமித்துக் கொள்ளலாம்.
6. கம்பீரமான தொனி, உச்சரிப்புத் தெளிவு, ஏற்ற இறக்கம் என்பவற்றோடு ஆற்றொழுக்கான கவர்ச்சியான, மொழிநடை.
7. தேவையான போது இருந்தபடியே அபிநயம் காட்டல். ( கதாப்பிரசங்கம் = தனிநபர் நடிப்பு)
8. இடைஇடையில் நாகரிகமான நடையில் நகைச்சுவைகள் கையாளல்.
9. பக்திபூர்வமான தோற்றத்தில் மேடையில் காட்சியளித்தல். (உடை (பட்டு)

சிவசின்னம், மாலைகள், உத்தரீயம், சேலை பெண்களாயின் அழகூட்டும் அணிகலன்கள் )வரவேற்பைத் தரும்.

10 சமய, இதிகாச, புராண, நீதி நூல்களை மேற்கோள் காட்ட உதாரணங்களையோ இன்றைய நடைமுறைகளையோ யதார்த்தங்களையோ கூட கதை நடுவே கூறி சபையைக் கவரலாம்.

11. நிகழ்ச்சி முடிந்ததும் திருப்புகழ் அல்லது வாழ்த்து பாடலாம்.

12. ஆலோசனை பெற்று திரையிசைப்பாடல்களாக அமையும் சினிமா நீதிப்பாடல்கள் பக்திப்பாடல்கள் என்பவற்றையும் பயன்படுத்த முடியும்.

## கதாப்பிரசங்கம் செய்யும் வரன்முறை

1. ஓங்காரத்துடன், பிள்ளையார் மந்திரம் ஓதுதல்.
2. ஆற்றுகைக்கு ஆயத்தமாதல் - கைத்தாளம் அல்லது சப்பிலாக்கட்டைகளை கைகளில் எடுத்துக் கொள்ளுங்கள்.
3. விநாயகருக்கு துதிபாடுங்கள். (பெரும்பாலும் ஹம்சத்வனி, நாட்டை கௌளை இராகங்கள்)
4. அங்கு உறையும் தெய்வத்துக்கு உகந்ததான ஒரு திருமுறைப்பாடலையோ பக்திப்பாடலையோ பாடி ஆரம்பித்தல். (ஹிந்தோளம் / தோடி / கல்யாணி / ரேவதி ராகங்களில் அமையலாம். )
5. கதைபண்ணவுள்ள கதையினைப் பற்றிய அறிமுகம். (திருமுறை/ புராணப்பாடல்)
6. கதையை சொல்ல ஆரம்பித்தல். நாயன்மார்களின் கதையானால் இடம் /இயற்கை வர்ணனை/பிறப்பு வளர்ச்சி பற்றிக் கூறி பின் தொடரலாம்.
   உதாரணம் : ஆறுமுகநாவலர் பற்றி தலைப்பானால் அவருடைய பிறப்பு வளர்ச்சி, அறிவுதேடல், கல்வி, பணிகள், அவர் வாழ்வின் முக்கிய சம்பவங்கள், சமய சமூகப்பணிகள்.....
7. இராமாயாணம், மகாபாரதம், திருவிளையாடற் புராணம் போன்றவையானால் கதையை நூலில் உள்ளபடி வளர்த்துச் செல்லல். இடையிடையே சாகித்தியம் /கீர்த்தனைகள் / பாடல்கள்
8. எந்தக் கதை செய்கிறோமோ அக்கதையின் அடிப்படை நூலிலுள்ள திருமுறைகள், புராணப்பாடல்கள், திருப்புகழ், இதிகாசக் கூற்றுக்களை பிழையற எடுத்துக் காட்டுதல் உங்கள் புலமையை அதிகரித்துக் காட்டும்.
9. சபையைக் கவர கையாளக் கூடிய முறைகளை, பொது விதிகளை மீறாமல் கையாளுதலில் தவறில்லை.
10. இலங்கையில் சைவப்பிரசங்க முறைமையின் தோற்றுவாய் என மதிக்கப்படும் எம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் எவ்வளவு தூரம் பிரசங்கம் மூலமாக சமயம் காக்க விரும்பினாரோ அந்த நல்லெண்ணத்தை நாம் எல்லோரும் உணர்ந்து உண்மையான சமயப் பிரசாரத்தை இப்பிரசங்கக் கலையூடாக சமயசிந்தனைகளை வரலாறுகளை பொதுமக்கள் அறிய வழிசமைக்க வேண்டியது காலத்தின் தேவை என்பதை திணைக்களம் சமய மாமன்றங்கள், தமிழ்ச்சங்கங்கள் பாடசாலைகள், மேலாக நம்நாட்டு ஆலயங்கள் உணர்ந்து இக்கலைக்கு மெருகூட்டவேண்டும் என்பதே யாபேரினதும் வேணவா ஆகும்.

**நன்றி**

விநாயகர் கீர்த்தனை
**இராகம் - ஹம்சத்வனி** **தாளம் - ஆதி**

**எடுப்பு**
ஞாலமுதல்வனே நாயகனே — நலம்
நல்கிடும் சித்தி விநாயகனே, நாதனே //

**தொடுப்பு**
வேழமுகத்தவனே வித்தகனே — வினை
வேரறுக்க வரும் உத்தமனே, நாதனே //

**முடிப்பு**
மூலப்பரம் பொருளே முக்கண்ணணே சிவ
முத்துக் குமரனுக்கு மூத்தவனே
ஞாலத்திலே எழுந்த தத்துவனே — நிதம்
நாவினில் ஆடும் நர்த்தனனே! - நாதனே//

**பாடுவதற்கு இசைவான சில உருப்படிகள்**

பிள்ளையார் : ஞான முதல்வனே

சிவன் : தில்லை அம்பல நடராசா....

முருகன் : உள்ளம் உருகுதையா

உமை : கற்பகவல்லி நின்

பொது : கலை இன்பமே நிலையின்பமாம்

போன்ற கீர்த்தனை பக்திப்பாடல்களை இசைக்கலாம்.

எடுத்தாளக் கூடிய புராண, காவியக் கதைகளுக்கான சில உதாரணத் தலைப்புகள்.

1) கணபதியே வருவாய்
2) கந்தன்கருணை
3) மீனாட்சி திருமணம்
4) நல்லை நகர் நாவலர்
5) கந்தபுராணம் எம் சொந்தபுராணம்
6) தொண்டர் தம்பெருமை

**உலகலா முணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.**

**திருச்சிற்றம்பலம்**

# ஆராய்ச்சிமணி (நீதி தவறாத நிருபன்)


**(கதாப்பிரசங்கம் செய்யும் பயிற்சிக்கேற்ப நாடகப்பாங்கான நடையில்)**

சோழநாடு சோறுடைந்து, காவிரியாறு பாயும் கன்னித்தமிழ்நாடு. பலவித வளங்களும் நிறைந்த பதி. நிலமகளின் திருவதனம் போன்ற சோழநாட்டிற்குத் திலகம் போல் அமைந்து அழகும், பொலிவும் நிறைந்து விளங்கும் திருவாரூரில் தியாகேசப்பெருமான் கோயில் கொண்டருளி அருள்பாலிக்கிறார். செல்வம் தரும் செங்கமலத் திருமகள் இத்தலத்தை வழிபட்டு பேறுபெற்ற காரணத்தால் திருவாரூருக்கு கமலாலயம் என்ற ஒரு சிறப்புப் பெயரும் உண்டு.

அத்தகைய திரு வதியும் திருவாரூரை மனுநீதிச்சோழன் என்ற பேரரசன் நீதிநெறிவழுவாது ஆண்டு வந்தான். அகிலாப்புகழோடு உலகெலாம்புரக்கும் அம்மன்னனுக்குப் பலகாலமாக மகப்பேறு வாய்க்காதிருந்தது. தனக்குப் பிறகு நீதிநெறியை நிலைநிறுத்தி ஆளும்மன்னனைப் பெறாது உலகு துன்புறுமே எனவருந்திய மன்னரும் தேவியும் தம் குறையைக்கூறி தியாகேசப்பெருமானிடம் அழுதும் தொழுதும் வேண்டியும் வணங்கினர். விரதம் நோற்று பூஜை, தானம், தியானமெல்லாம் செய்து வழிபட்டு வந்தனர். - (பாடல் இசை- ஸ்ரீரஞ்சனி)

**"அருட்கடலே! ஆலமுண்ட நீலகண்டரே! முருகவேளைப் பெற்ற முழுமுதற்கடவுளே! எனக்குப்பின் இவ்வையகத்தை ஆளுவதற்கு ஒரு புதல்வனைத் தந்தருளுவீர்"** என வேண்டினர். வேண்டுவார் வேண்டுவதை வழங்கும் திருவாரூர்த் தியாகேசப்பெருமான் அவர்கள் வேண்டுதலுக்குச்செவிசாய்த்தார். வலம்புரிச்சங்கொன்று ஆணிமுத்தினைக் கருக்கொண்டது போல சோழமகாரஜனின் மனைவி கருவுற்றாள். நாளுங் கோளும் சிறந்திருக்கும் அற்புதமான வேளையில் அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். எல்லா இலக்கணங்களும் பொருந்தியவதரித்த தம்செல்வனுக்கு தியாராஜப்பெருமானின் திருநாமமாகிய "வீதிவிடங்கன்" என்ற திருநாமத்தையே சூட்டி அரசனும் ஆயத்தாரும் மகிழ்ந்தனர்.

குழந்தையைத் தங்கத் தொட்டிலிலிட்டு தாலாட்டி, சீராட்டி தருணத்தில் செய்ய வேண்டிய கிரியைகளையெல்லாம் காலகாலத்தில் செய்து, வளர்த்து வரும் காலத்தில் வீதிவிடங்கனுக்கு அறிவுநூல், நீதிநூல், சாஸ்திரங்கள் பல கலைகளுடன் அரசர்களுக்குரிய வில், மல் பயிற்சிகளும், தேரோட்டம், குதிரையேற்றம் முதலிய போர்க்கலைகளையும் அரசன் கற்றுக் கொடுத்தான். தாய்தந்தையரைத் தொழுது, இறைவனையேத்தி இளம்பரிதிபோல, வளர்ந்தான் மைந்தன் வீதிவிடங்கன். இளவரசுப்பட்டமெய்தும் பருவத்தை அடைந்தான்.



பரங்கருணைப் பெருந்தடங்கலான திருவாரூர்த் தியாகேசப்பெருமானைக் கோயிலிலே சென்று தானே வழிபட விரும்பினான் வீதிவிடங்கன். மன்னனிடமும், தாயிடமும் விடைபெற்று புதியதோர் செம்பொற்றேரில் ஏறி உறவும், நண்பரும், காவலும், சூழ இனிய ஆடல்பாடல்கள் சகிதம் திருவாரூரின் வீதிவழியே மைந்தன் தேரூர்ந்து சென்றான். அழகான இளவரசனைக் கண்ணுற்ற இளமங்கையர்களெல்லாம் மயங்கினர்! அத்தனை அழகுக் காட்சி அது என்கிறார் சேக்கிழார்.

தருமமானது தயவு இன்றி சோதிக்க வந்ததுவோ என்றவாறு ஒரு ஆண் இளம் பசு ஒன்று துள்ளித் துள்ளிப் பாய்ந்தோடி வந்து, ஒருவர் கட்புலனுக்கும் படாதபடி அதிவிரைவில் குறுக்கே ஓடிவந்து வீதிவிடங்கன் ஏறி உலாவந்த அம்மணித்தேரின், சக்கரங்களுள் அகப்பட்டு, குடல்சரிந்து, உடல் சிதைந்து உயிர் துறந்தது! - ( சோக இசை : முகாரி அல்லது சுகபந்துவராளி)

பாவம்! இக்கன்றின் அறிவுள்ள தாய்ப்பசு இதனைக்கண்டு அருகிலே ஓடிவந்து, பதைத்து, துடித்து மதிமயங்கி "அம்பா..... அம்மா" எனக் கதறியது. பொறுக்கமுடியாத துயரம் அடைந்தது. சற்றும் எதிர்பாராத விதமாக நடந்த இக்காட்சியைக் கண்டு அதிர்ச்சியால் மயங்கி வேதனை மிகவெய்தினான் பாலகனான மைந்தன் வீதிவிடங்கன். நடுநடுங்கி செய்வதறியாது திகைத்தான். இறந்த கன்றையும், தாய்ப்பசுவையும் மாறிமாறி பார்த்து மெய்துயிர்ந்தான்.

**"அந்தோ கெட்டேனே, எம் சிவபெருமானே! அகிலாண்ட நாயகா! பெரும் பாவத்தைச் செய்துவிட்டேனே. தேவரீரைச் சேவிக்க எண்ணிய பாவியாகிய அடியேன், அரச போகத்தினால் வந்த மோகத்தினால் மதிகெட்டு தேரேறியா நான் உமைநாடி வரவேண்டும்? கால்களால் நடந்து என் கடவுளைக் காண வந்திராத யான் என் தேரினாலேயே இவ்விளங்கன்று பரிதாபமாக உயிர்துறக்கக் காரணமாயிருந்து விட்டேன். பசுவதை பெரும் பாவமன்றோ? குற்றமற்ற குலத்திற் பிறந்த யான் கொடும் பாவத்தைப் புரிந்து விட்டேன். மனுநீதிச் சோழராகிய என் பிதாவுக்குப் பெரும் பழியைத் தேடிவைத்த பாவியாகினேனே! இந்தக் கன்று ஒருவரும் அறியா வண்ணம் எப்படி வந்தது? நான் பகற்குருடானேனே. இனி நான் இவ்வுலகில் எப்படி வாழ்வேன்! அன்று அடைக்கலம் புகுந்த ஒரு புறாவுக்காக தன் உடற்சதையெல்லாம் அறுத்துத் தந்து, தானும் துலையேறிய சிபியின் மரபில் வந்த நானே எம்குலத்துக்கும் பெரும் பழிதேடிக் கொண்டேனே. இப்பழிபாவத்தினின்றும் நான் எப்படிக் கரையேறுவேன்**

**இறைவா"** என்று மனமிரங்கி ஏங்கினான் வீதிவிடங்கன். அவனோடு வந்த மந்திரி, பிரதானிகள் இளவரசன் மைந்தனை நோக்கினர். வீதிவிடங்கனைத் தேற்ற வழயறியாது திகைத்து மயங்கினர். கடைசியில் **"இளங்கோவே! வருந்த வேண்டாம். தாங்கள் வேண்டுமென்று இப்பாவத்தைப் புரியவில்லையே. கன்றுக்குட்டிக்கு ஆயுள் முடிவுற்ற படியால், இத்தனை பேருக்குமே கண்ணுக்குத் தோன்றாமல் துள்ளி ஓடிவந்து அதுதானே தேர்க்காலில் முட்டி, வீழ்ந்து மாண்டது. அதற்கு தாங்கள் என்ன செய்ய முடியும்! எல்லாம் இறைவன் செயல். இதற்காகத் தாங்கள் வேதனையுற்று உயிரை மாய்த்துக் கொள்ள முயல வேண்டாம். அது நியாயமும் ஆகாது; எனவே அறநூல் வல்லஆன்றோரை அடுத்து, இதற்கான பிராய்ச்சித்தம் செய்து கொள்ளலாம். அதுவே இனிச் செய்யத்தக்கதும் கூட. எங்கள் சொல்லைத் தள்ள வேண்டாம் இளவரசே"** என்று பலநியாயங்களை எடுத்துரைத்து வீதிவிடங்கனை அவ்விடத்தினின்றும் அழைத்துச் சென்றனர் மந்திரி பிரதானிகள். இவ்வாறிருக்கையில் அங்கே தாய்ப்பசு மூர்ச்சை தெளிந்து எழுந்தது; தாரை தாரையாகக் கண்ணீர் பெருக மீண்டும், தன் துயரத்தை நினைத்து கதறியது. **என் கண்ணே! சற்று நேரத்துக்கு முன் பால் குடித்து அழகாக என்முன் விளையாடினாயே! ஐயோ உன் இளமையான உடம்பு முறிய சிதைந்து இப்படி மாண்டனையே செல்வா! நீ எவ்வாறு துடித்தாயோ! உன் அழகு முகத்தைக் காணும் நாளும் இனி இல்லையோ! உன்னைப் பெறுவதற்கு நான் எத்தனையோ நாள் தவம் புரிந்தேனே. எத்தனை நாள் புல்லும் தண்ணீரும் உட்கொள்ளாமல் பட்டினி கிடந்திருப்பேன். என் அருமைக் குழந்தையே. பெற்ற வயிறு பற்றி எரிகிறதெடா. கண்ணே உன்னைக் கொன்றவர் இன்னார் என்று தெரியவில்லையே. உன்னைக் காணுந்தோறும் என் மடியில் பால் சுரக்க என் உடலெல்லாம் பூரிக்குமே. நான் என்ன பாவம் செய்தேனோ? கொலையும், புலையும், களவும், பொய்யும் அணுவளவும் இல்லாத கருணை நிறைந்த இந்த ஊரிலே நெஞ்சம் அஞ்சாமல் உன் உயிரைக் காவு கொண்டவன் யாரோ. தெய்வமே யான் என்ன செய்வேன். என் தலையீற்றுச் சேய்க்கன்று உன் திருவடிக்கு வந்ததோ. இந்நகரை ஆளுகின்ற நீதிமன்னர் பிரானின் நீதியும் பிழைக்குமோ. இப்போதே அரசனுக்கு அறிவிப்பேன்"** என்று புலம்பியது தாய்ப்பசு.

யாருக்கும் எவ்விதத்திலும் ஏது இடர் நேர்ந்தாலும் அச்செய்தியை உடனடியாக அறிவித்து நீதிகேட்க அனுசரணையாக சோழமன்னனின் அரண்மனை வாயிலில் கட்டப்பட்ட மணியே அந்த **ஆராய்ச்சிமணி**. மனுநீதிமன்னனின் அத்தாணி மண்டபம் நோக்கி ஓடியது தாய்ப்பசு! குடிகளுக்குக் குறை ஏற்பட்டால் அரசனுக்கு அறிவிக்குமாறு கட்டப்பட்டிருந்தது. அம்மணியானது இதுவரையில் ஒருநாளேனும் அசைந்ததே இல்லை.




துன்பமேலீட்டினால் தாய்ப்பசுவானது பரிதாபமாக, வெய்துயிர்ந்து ஓடிவந்து, தன் கொம்புகளினால் தொங்கிக்கொண்டிருந்த அந்த ஆராய்ச்சி மணியை இழுத்து அடித்தது. டாங்........... டாங்................ டாங்.......... பெரிய ஓசை. அரசனின் அத்தாணி மண்டபத்தை மாத்திரமின்றி திருவாரூரையே கலங்க வைத்தது அம்மணியின் ஓசை! "பழிப்பறை முழக்கோ! பாவத்தின் ஒலியோ, வேந்தன் வழித்திருமைந்தன் ஆவிகொள வரும் மறலியூர்திக் கழுத்தணி மணியின் ஆர்ப்போ?" என்று யாவரும் துணுக்குற்று அஞ்சி ஏங்க அந்த மணியின் ஓசை எங்கும் கேட்டது. கருணையே ஒரு வடிவமெடுத்தது போன்ற, நீதிவிலகா மன்னன் மனுநீதிச்சோழனின் காதில் இம்மணியோசை நாராசமென விழுந்தது. அதிர்ச்சியுற்று, நடுநடுங்கி அரியாசனம் விட்டெழுந்து ஓடிவந்தான் நீதிச்சோழன். **"ஆருக்கு என்ன குறையோ. ஒரு நாளும் அசையாத இந்த ஆராய்ச்சி மணியை இன்று அறைந்து அடித்தது யாரோ" என்றவாறு ஓடி வந்தான் மன்னன். காவலர் எல்லோரும் அஞ்சிக் கலங்கினர். மந்திரிமார் மௌனமாய் தலைசாய்ந்து நின்றனர். அப்போது சோழமன்னன் காவலரை நோக்கினான். "மன்னர் பிரானே இதோ இப்பசுவே ஆராய்ச்சிமணியை அடித்தது" என்றான் மந்திரி. "நன்றாயிருக்கிறது உங்கள் அமைச்சுத்திறம்! இப்பசுவிற்கு தீங்கு செய்தவன் யார்? இந்தப் பசுவிற்கு என்ன நடந்தது? இது ஏன் அழுகிறது.............."** என்றான்.

அச்சத்துடன் அருகில் நின்றுகொண்டிருந்த மந்திரிமார் **"வேந்தர் வேந்தே இப்போதுதான் நானும் கேள்வியுற்றேன். நமது செல்வப் புதல்வர் இளவரசன் வீதிவிடங்கன் தேரேறிச்சென்றபோது, இப்பசுவின் கன்று எப்படியோ ஒருவர் கண்ணிலும் படாமல் துள்ளிச் சென்று தேர்ச்சக்கரத்திலே அகப்பட்டு மாண்டு விட்டது. அதனால் வேதனையெய்தும் இத்தாய்ப்பசு அல்லற்பட்டு ஓடிவந்து தங்கள் ஆராய்ச்சி மணியை அடித்திருக்கிறது"** என்றனர்.

இச்சொற்கள் மன்னன் காதில்படவும் அவன் மூர்ச்சியாகினான். அவ்வாறாக அதிர்ச்சியினால் வேதனை மீதுர மயக்கமுற்றவன் மீண்டெழுந்தான். தாய்ப்பசு எவ்வளவு துன்பம் எய்தியதோ அவ்வளவு வேதனையை மன்னரும் எய்தினார். **"ஐயகோ என்ன செய்துவிட்டேன். என் ஆட்சி நன்று: நன்று: எனது ஆட்சியில் இதுகாறும் ஒரு சிறிய உயிருக்கும் தீங்கு நிகழ்ந்ததில்லை. பசுவுக்குக்கன்றிடம் அளவற்றஅன்பு உண்டென்பதை அறிகிறேனே. பாவம் அது! இந்தப் பசுவின் கண்களில் அருவிபோல் நீர் பெருகி வருகின்றதே. இதனைக் கண்டும் இன்னும் என்**

உயிர் பிரியவில்லையே. மணியை அசைத்தால் மன்னன் தன் மனத்துயரை நீக்குவான் என்று கருதியன்றோ அவ்வறிவுள்ள பசு மணியை அசைத்திருக்கிறது. பசு உலகமாதாவன்றோ? சிவபெருமானுக்கு பஞ்சகௌவியத்தைத் தருவதும், திருநீற்றுக்கு அனுகூலமான சாணத்தைத் தருவதும் பசு அன்றோ! அதுவும் சாதுவான உயிராயிற்றே, பசுக்கொலை மிகப்பெரிய பாவமாயிற்றே. இதற்கா நான் பிள்ளையைப் பெற்றேன்? பிள்ளையில்லாமல் நெடிதுகாலம் தவம் கிடந்தேன்: எம்பெருமான் தியாகேசனருளால் பிள்ளையைப் பெற்றெடுத்தேன் என்று எண்ணி இதயத்தில் எண்ணி எண்ணி மகிழ்ந்தேனே! என் தலையிலும் இடி விழுந்ததோ. அந்தோ. இப்பாவிமகன் ஏன் தேரேறிச் சென்றான். சென்றவன் எச்சரிக்கையாகச் செல்ல வேண்டாமோ, இப்பசுவின் துயரை என்ன செய்து ஆற்றுவேன். இப்பிறவியில் அணுவளவும் நான் குற்றம் புரிந்தேனல்லனே. முற்பிறப்பில் செய்தவினை இங்ஙனம் வந்து மூண்டது போலும். என் செங்கோல் கொடுங்கோலாக மாறுவதா........ ஐயோ என் செய்வேன் ஏந்தலே. இறைவா!

“ மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தழ வீடும்
என்நெறி நன்றா லென்றும் என்செய்தால் தீருமென்னும்
தன்னிளங் கன்று காணாத் தாய்முகம் கண்டு சோரும்
அந்நிலை யரசனுற்ற துயரமோ ரளவிற் றன்றால்.”

என்று புலம்பிப் புலம்பி அழுது பின் அமைச்சரை வினவினான் மனுநீதிச்சோழன்.

“அரசே உங்கள் வேதனையை நாமறிவோம். நீதிதவறாத நம் மன்னன் நெறியை உலகும் அறியும். எமது சொற்களைக் கேட்டருளுங்கள். இளவரசர் ஒரு பாலன்: ஒரு பாவமும் கெடுதலும் அறியாதவன். தங்கள் புதல்வன் அறிந்து இத்தவறினைச் செய்தாரில்லை. ஒரு எறும்புக்குக் கூட தீங்கு செய்தறியாத அவர் செடி கொடிகள் காற்றினால் அசையக் கண்டால் கூட கண்ணீர் விடுவதை நாம் காணுகின்றோம். கருணையுள்ளம் கொண்ட வீதிவிடங்கன் மீது யாதொரு தவறுமில்லை. விதியினால் ஏவப்பெற்று கன்று, பாருங்கள்............ பல்லாயிரம் பேரையும் தாண்டி வந்து தானே தேரில் சிக்கி உயிர்விட்டது. அதற்கு அவர் என்ன செய்வார்? எல்லாம் அறிந்த தங்களுக்கு நாங்கள் அதிகம் கூறவேண்டாம். அறியாமல் நேர்ந்த இக்கொலைக்கு ஏற்ற பரிகாரம் தேடுவது தான் முறை. அதனை நாடுவோம் அரசே!” என்றுரைத்தனர்.



" மாநிலங்கோ வல்லனாவான் மன்னுயிரகாக் குங்காலை
தான தனுக்கு இடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ "

மனுநீதிமன்னன் பேசத்தொடங்கினான். "அமைச்சர்களே என்ன கூறுகின்றீர்கள். நடுநிலை தவறாதவர்க்கு இது நியாயம் ஆகுமோ? தனக்கென்று ஒரு நியாயம்: பிறர்க்கென்றால் ஒரு நியாயமா? நீங்கள் பட்ச பாதகமாகப் பேசுகிறீர்கள். என் மகன் செய்தான் என்பதற்காக வெறுமனே பிராயச்சித்தம் செய்வித்தும், மற்றவர் தவறு செய்தால் அதற்கு மரணதண்டனையும் விதித்தால் தருமம் தான் சலியாதோ? தீராத பழியும் பாவமும் ஆகாதோ? தவறாக நீவிர் ஏன் இப்படிக் கூறினீர். இதுவும் யான் செய்த வினையே போலும். "மனுநீதிச்சோழன்" என்ற பேரைத்தாங்கிய நான் அணுவளவும் அம்மனுநெறியினின்றும் வழுவமாட்டேன். வழுவினால் 28 கோடி நரகமும் என்னை வா என்று அழைக்குமே. கன்றை இழந்து பரிதவிக்கும் இப்பசுவைப் போல் நானும் என் மகனை இழந்து வருந்துவதே நியாயமுமாகும்" என்றான் மனுநீதிச்சோழன். மந்திரிமார் மீண்டும் மன்னரைப் பணிந்து பின்வருமாறு கூறினார்கள்.

"மாநிலங்காக்கும் மகிபரே! பசுவதைபுரிந்தோர்க்கு அறநூல்களில் பிராச்சித்தம் வகுக்கப்பட்டிருக்கிறது. இறந்த பசுவின் தோலைப் போர்த்திக்கொண்டு, பசுமந்தையிலே வசித்தும், கோநீரால் குளித்தும், பசுவைக் காத்தும், பசுதானம் புரிந்தும், பசுக்கள் புல்மேயும் இடங்களில் வெயிலில் காய்ந்திருந்தும், பசு மழையில் நனையும் போது தாமும் நனைந்தும், பட்டினி கிடந்தும் உயிர் புரக்குமாறு சிறிது காய்கனிகளை உண்டும் 12 ஆண்டுகள் இருக்க வேண்டுமென்பதே இதற்கு கழுவாய் என்கிறது நூல்கள். இப்படியிருக்க அதனை விடுத்து பெற்ற மகனையே கொன்று விடுவது முறைமையன்று. மேலும், இளவரசன் வீதிவிடங்கன் பசுக்கன்றை வேண்டுமென்று தெரிந்து கொல்லவில்லை. தானே வந்து தேரில் அகப்பட்டல்லவா அப்பசுக்கன்று உயிரிழந்தது. ஐந்தறிவுபடைத்த பசுவின் கன்றுக்காக ஆறறிவு கொண்ட மகனை, கொல்வது தாரதம்மிய விதியின்படி நியாயமாகாது: அது மன்னிக்கப்படும் அரசே." என்றனர்.

மன்னன் மீண்டும் ஆத்திரத்தில் கடுமையான தொனியில் பேசினான்... "மதி அமைச்சர்களே! பசுவதைக்குக் கூறப்பட்டுள்ள கழுவாய் பற்றி நானும் நன்றாகவே அறிந்து வைத்திருக்கிறேன். பசுவின் கன்று மாண்டதுக்கு என் மகனே காரணம். என் மகனுக்காக பிராச்சித்தம் ஒன்றை விதிப்பேனேயானால் அதனால் பசுவின் துயர்

**நீங்கலாகுமோ? கடப்பாரையை விழுங்கிவிட்டுச் சுக்குநீர் உண்டதுபோல வழிசொன்னீர். தன்னருமைக் கன்றை இழந்த பசு அலறுவது போல நான் என் ஒரு மைந்தன் வீதிவிடங்கனையும் இழந்து அலற வேண்டும். அதுவே நீதி. நீங்கள் கூறுவதெல்லாம், உயிரில் விருப்பமுள்ளவனுக்கும், காமிய கருமங்களைச் செய்பவனுக்கும் விதித்த சாமானிய தருமமேயாகும். சிவகதியடைய விரும்பியவர்களுக்கும், பற்றற்றவர்களுக்கும் இது ஏற்புடையதாகாது."**

மேலே நீதிவழுவ விரும்பாத மனுச்சோழன் மந்திரிமாரை நோக்கி **"உங்கள் மதிநுட்பம் சால அழகியது! சால அழகியது! அறிவு என்பது உடம்பினைக் குறித்து அன்று உயர்வு, தாழ்வு உடம்பையும், பிறப்பையும் சேர்ந்தது அன்று அமைச்சர்களே. அது பகுத்தறிவுள்ள மனிதனுக்கு பயன்படாதவிடத்து அவன் விலங்கு தான். விலங்குக்கு அவ்வறிவு வாய்க்கப் பெறுமேல் அதுவும் மனித உயிரி தான். பாருங்கள் தன்கன்று மாண்டது குறித்து மெய்சோர, வேதனை மிக எய்திய அப்பசு, "யாராவது தமக்கு தீங்கு செய்வராயின் இந்த மணியை அசைத்தால் மன்னராகிய நான் நேரில் வந்து அவர்க்கு நியாயம் வழங்குவேன்" என்று எண்ணி என் அத்தாணிமண்டப வாயிலில் தொங்கிக் கொண்டிருக்கும் ஆராய்ச்சி மணியை அடித்து என்னிடம் அறிவித்து, நியாயத்தை எதிர்பார்த்து நிற்கும் இப்பசுவையும், இதன் கன்றையும் ஐந்து அறிவே படைத்த விலங்கு என்றா கூறுவது? இந்த அறிவு மனிதனுக்குக் கூட உண்டாகாதே. ஆதலினால் மனிதக் கொலைக்கு ஏற்ற தண்டனையே இதற்கு உரியதென்பேன். ஆக என் மகனைக் கொல்வது என்பதே பொருத்தமான நீதியும் நெறியுமாகும். மேலும் இதுவரையில் பசுவதைக்காக மனிதரைக் கொன்றதாக வரலாற்றிலும், வழக்கிலும் இல்லை என்று கூறும் உங்களிடம் இன்னொன்று கேட்கிறேன். இதுவரையில் தன் துயரை முறையிட்டு எங்கேனும் ஒரு பசு தன் மன்னனிடம் முறையிட்டு நீதிகேட்டு ஆராய்ச்சி மணியை அடித்ததாக வரலாற்றிலும் வழக்கிலும் நீவிர் அறிந்திருக்கிறீர்களா? எனவே, பசுவின் துயரை நீக்கக்கூடிய பக்குவமில்லாத நான், அத்துன்பத்தை அடைதலே செய்யத்தக்கது. ஆகையினால் நானும் என்மகனை இழந்து வருந்துவதே முறை. அதுவே நியாயமும் ஆகும்"** என்று தீர்ப்பளித்தான் மனுநீதிச்சோழன்.

மந்திரிமார், காவலர்கள் மன்னரின் இறுதித் தீர்ப்புக்கு பதிலேதும் கூறமுடியாதவர்களாக வாயடைத்து வருந்தி அழுதுநிற்க மன்னன் மந்திரிமாரில் ஒருவனான கலாவல்லபவர் என்பவரை நோக்கிய அரசன், தன் மகனையும் அழைப்பித்து அவன் கையிற் கொடுத்து **"மந்திரியாரே இவனைப் பசுவின் கன்று மாண்ட இடத்தில் படுக்கவைத்து நீரே தேரேறி இவன்மேல் தேரினை நடத்திக் கொல்லக் கடவீர்"** என்று கட்டளையிட்டான் மன்னன்.

மந்திரி பதைபதைத்து ஓடினான். நடுநடுங்கி மாய்ந்தான். "அந்தோ நான் என்ன செய்வேன்? தவமிருந்து பெற்ற தனிமகனை நான் கொல்லவா? அமிர்தத்தைத் தமரில் விட்டு வா என்று கட்டளையிட்டது போல அரசன் ஆணையிட்டாரே. அரசரின் கட்டளையை நானெப்படி மறுப்பேன். அதுவும் குற்றமல்லவா, சிறுமகனைக் கொல்லும் குற்றம். இக்கட்டளையை மன்னர் என கருத்தாள வேண்டும். சிவனே: சங்கரா: இது என்ன சோதனை: நானென்ன பாவம் செய்தேன். அப்படியாயின் தன் மகன் வீதிவிடங்கனுக்கு மன்னன் கொடுத்த தண்டனையை நான் அடைவேன்" என்றுரைத்த கலாவல்லபர் என்ற அந்த மந்திரி, அக்கன்று தேர்க்காலில் அகப்பட்டிருந்த அதே இடத்தக்குப் போய், தன் உயிரைத் தானே துறந்து, இறந்தார்.

இச்செய்தியை மற்றைய தூதுவர் மன்னனுக்கு ஓடிச்சென்று கூறினர். அருள் நிறைந்த மன்னன் வாய்விட்டு அலறினான். துன்பத்துக்கு மேல் துன்பம் எய்தினான் "பழிக்கு மேல் பழியும், பாவத்துக்கு மேல் பாவமும் உண்டாகியதே, அந்தோ! அன்பும் கருணையும் நிறைந்த என் அமைச்சரே மாண்டொழிந்தீரோ? நீர் உயிரிழந்ததற்கு நானன்றோ காரணமாகி விட்டேன்? மகன் பசுவின் கன்றைக் கொன்றான், நான் அப்பாவி மந்திரியைக் கொன்ற பாவியாகினேன், தியாகேசா! இப்படியும் என்னைச் சோதிக்கலாமா? என் ஐயனே! என்நெறி தவறாத அரசாட்சியும் முறிவு பெற்றதோ ஐயா! இனி அழுது என்ன பயன்? கன்றுக்காக மகனைக் கொன்று, மந்திரிக்காக நான் என் உயிரையும் மாய்த்துக் கொள்வேன். என் உயிரையும் மாய்த்துக் கொள்வேன்." என்று கதறி முடிவு செய்த மனுச்சோழன், மகனை முகம் நோக்காமல், பசுவின் கன்று இறந்த அதே இடத்தில் போய் படுக்குமாறு கட்டளையிட்டான். வீதிவிடங்கனாகிய அந்நீதிமைந்தனும், உடன்பட்டு தந்தையின் கட்டளைக்கு, நியாயத்துக்கு உள்ளம் உவந்து சென்று கன்று இறந்த இடத்தில் மல்லாந்து படுத்துக் கண்களை மூடிச்சிவ சிந்தையுடன் இருந்தான்.

செய்தி கேட்டுப் பதறி ஓடிவந்த வீதிவிடங்கனின் தாய், சோழனின் தேவி திகைத்து நிலத்தில் புரண்டழுதாள். "தெய்வமே! என் குழந்தையைக் காத்தருள்வாய்!" என்று ஓலமிட்டாள். மண்ணும் விண்ணும் கலங்கித் கதறி அழ இவ்வதிசயத்தைக்காண தேவரெல்லாம் வானிலே கூடிநிற்க நீதிதவறாது நிருபனாம் மனுநீதிச்சோழன் " தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன் மீது தானே தேராழி ஊர புறப்பட்டான்" என்று சேக்கிழார் பெருமான் இவ் அருமந்த காட்சியை நெஞ்சு நெகிழும்படி தம் பெரியபுராணத்தில் குறிப்பிடுவார்.

"ஒரு மைந்தன் தன்குலத்துக்கு உள்ளான் உணரான்:
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமைந்தன் தேராழி உறவூர்ந்தான் மனுவேந்தன்:
அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோ தான்"

**நீதியே! நிர்மலா! நிறை! தியாகேசனே! என் மனத்திலிருந்து நீயே உணர்த்தும் வண்ணம் நீதியைச் செலுத்த எனக்கு உறுதியளி ஐயனே. கருணைக்கடலே நீ தந்த என் செல்வம் இவன்: இனி நீ தானருளவேண்டும்"** என்று திருவாரூர் தியாகேசப்பெருமானைத் தியானித்து வேண்டி மன்னனவன் தன் ஒரு மைந்தன், குலமைந்தன் மேல் தேரைச் செலுத்தி அவனைக் கொன்றான். கள்ளமறியாத அம்மைந்தனின் உடல் சக்கரத்தில் அகப்பட்டு அரைபட்டது!

(ஓசையும் சோக இசையும் - முகாரி ராகம்)

**" தண்ணளிவென் கடைவேந்தன் செயல்கண்டு தரியாது**
**மண்ணவர்கள் கண்மாரி பொழிந்தார், வானவர்மாரி சொரிந்தார்**
**அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்**
**விண்ணவர்கள் தொழு நின்றான் வீதிவிடங்கப் பெருமான்"**

தேவரும் கணங்களும் புடைசூழ மழவிடைமேல் மணிகண்டப் பெருமான் உமையம்மையாரோடு தோன்றியருளினார். அகக்கண்களால் கண்ட ஆண்டவனை, மனுவேந்தன் தன் புறக்கண்ணாலும் கண்டு தொழுதான். செஞ்சடையில் விளங்கக் கூடிய பிஞ்சு மதியையும், பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு துலங்க மரகதக் கொடி போன்ற மங்கை நல்லாளையும் கண்டு தொழுதான். மனுவேந்தன் தேவியும் மகிழ்வெய்தித் தொழுதாள். **" பூதநாயகனே போற்றி! புராரியே போற்றி! ஞான போதநாயகனே போற்றி! புண்ணியப் பொருப்பே போற்றி! நாதநாயகனே போற்றி, நங்கை நாயகனே போற்றி! வேதநாயகனே போற்றி! விமலனே போற்றி! போற்றி!.....** என்று பலவாறு துதித்தான் மன்னன்.

**"மனுநீதிச்சோழ மன்னா! நினது செங்கோல் வாழ்க! நின்புகழ் நீதிகாத்த நிருபனே! மனுநீதியே! உன் பெருமை உன் அறம் எல்லாம் இந்த உலகம் உள்ள வரையில் என்றும் நின்று நிலைக்கட்டும். உலகெல்லாம் நின்புகழ் ஓங்கட்டும்"** என்று சிவபிரானும் பார்வதியும் வாழ்த்தி நிற்க, அந்த அருள் மழையால் இறந்த ஆண்கன்றும், சிறந்த கோன்கன்றும், மதியுடை மந்திரியும் உயிர் பெற்றெழுந்தனர். **"முன்னவனே முன்நின்றால் முடியாத பொருளுளதோ"**

உயிர் பெற்றெழுந்த வீதிவிடங்கனாம் தனிமைந்தன் இளவரசன். தன் தந்தை தாயாரின்தாள் மலர் மேல் வீழ்ந்து வணங்கினான். மைந்தனை மார்போடணைத்து உச்சி மோந்து, மனம் மிக மகிழ்ந்து **"என் கண்ணே காணக்கூடாத கண்ணுதல் கடவுளை உன் காரணமாக எம் கண்ணால் கண்டோம். நீயே எம் குலவிளக்கு. உன்னைப்போல் "விண்ணிலும் மண்ணிலும் பேறுபெற்றவர் யாருமே இல்லை. நான் பெற்ற பாக்கியமே பக்கியம்"** என்று உவகை கொள்ள மந்திரிமாரும் மற்றுள்ளோரும்

புதல்வன் வீதிவிடங்கனைத்தழுவி அன்பு பாராட்டினர். தன் கன்றினை மீண்டும் கண்ட தாய்ப்பசு மடி சுரந்து மோந்து மகிழ்ந்து நின்றது. பால் உண்டு பரிந்து நின்றது.......

"அடிபணிந்த திருமகனை ஆகமுற எடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயர் நீங்கினான் நிலவேந்தன்
மடிசுரந்து பொழி தீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பருவரல் நீங்கிய தன்றே"
மண்ணகம் மகிழ்ந்து!

மண்ணகமும் விண்ணகமும் இவ் அற்புதக் காட்சியைக் கண்டு மகிழ்ந்து துதித்தது.

இசையுடன் (மத்தியமாவதி இராகம்)

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

(நீதிதவறாத நிருபன் - மனுநீதிகண்டசோழன் கதைமுற்றிற்று)

சுபம்

குறிப்பு :

இவ்விதமாக புராணவரலாறுகளையும் இதிகாசக்கதைகளையும் நாடகமுறைப்பாணியில் எழுதி அமைத்துக் கொண்டால் சிறியவர்களும் பெரியவர்களும் நிகழ்ச்சி ஆற்றுகைகளின் போது தேவையான இடத்தில் தேவையான இடத்தில் தேவைக்கேற்ப பொருத்தமாக மேடைப்பேச்சாகவோ இவ்விதம் இசைச் சொற்பொழிவாகவோ அன்றி நாடகமாகவோ வில்லிசையாகவோ தயாரிக்கமுடியும் என்பதை இக்கதையின் பாணியை வாசித்து உணரும்போது அறியமுடிகிறதல்லவா!

'அர்த்தமுள்ள பேச்சு அறிவுடன் சேரும்,
இதயம் கவரும் இசை ஆன்மாவோடு சேரும்"



உ
சிவமயம்

"சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**இனி,**

**என்னுடன் ஒரு நிமிடம்..........**

நம் தமிழ், சமய இலக்கியங்களுடாக உண்மை நீதிநெறிமுறைகளையும் சமயவிழுமியங்களையும் கலை, பண்பாடுகளையும் தத்துவங்களையும் வளரும் இளையதலைமுறையினருக்கு தெற்றென எடுத்துணர்த்தி மக்களுக்கு பயனும் மகிழ்வும் தரும் வகையிலே இச்சிறுவர் இலக்கிய நூல் உங்கள் கைகளில்........

ஓரளவு நாடக உரையாடல் பாணியோடமைந்த இந்நூல், சிறந்த பேச்சாளராக வரவிரும்பும் மாணவர்களுக்கும் மற்றோருக்கும் நிறையவே பயன்தரும் என்பது எனது நம்பிக்கை.

பாடசாலை மாணவர்கள், அறநெறிப்பாடசாலைப்பிள்ளைகள் மற்றும் சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் வாசித்தறியப் பொருத்தமான வகையிலே இந்நூல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. உங்கள் ஆர்வத்திற்கேற்ப இங்கே கூறப்படும் சம்பவங்களையும் கதைகளையும் கதாப்பிரசங்கமாக மாத்திரமின்றி குறு நாடகமாகவும் வில்லிசையாகவும், தேவையானபோது மேடைப்பேச்சாகவும் பயன்படுத்தக்கூடிய முறையிலே தமிழ் உரைநடை புனைந்து தெளிவாகவும் அழகாகவும் விடயங்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

"கதாப்பிரசங்கம்" என்ற அரிய கலைபற்றிய அறிமுகமும் இந்நூலில் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். கொஞ்சம் பாடக்கூடியவர்களால்-இசைஞானம் கைவரப்பெற்றவர்களால் பக்கவாத்தியம் சேர்த்து இக்கதைகள் மேடைகளிலே சொல்லப்படுமானால் அதுவே சங்கீத கதாப்பிரசங்கமாக மிளிரும். பேச்சாற்றல் வாய்க்கப்பெற்ற, வளரும் சொற்பொழிவாளர்கள் பாடக்கூடியவர்களாக இசைசேர்த்து கதைகளைப் பண்ணும்பொழுது அது இனிய இசைச்சொற்பொழிவுக்கலையாக உருவாகும். கிருபானந்தவாரியார், மணிபகவதர், அடியேன் போல நீங்களும் நல்ல பிரசங்கிகளாகலாம். சமய பிரசாரத்திற்கும் பணி செய்யலாம்.

எக்காலத்தும் ஆலயங்களிலே முக்கியமாக இடம்பெறும் தெய்வீகக் கலையான இசைப்பிரசங்க முறைமை மூலமாக தமிழரின் பண்பாடுகளை, சமய வரலாறுகளை, மனித நீதி விழுமியங்களை எடுத்துக் கூறும் தமிழ்ப்புராண, இதிகாச செய்திகளையெல்லாம் புதுமெருகூட்டி இனி கதைசெய்வோம். அதற்கு நிறைந்த அறிவும் தேடலும் அவசியம் என்பதை முதலில் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்! அதற்கான ஏற்பாடே இச்சிறியநூல். அற்புதமான நம் தெய்வீகக் கலைகள் பாதுகாக்கப்பட்டு மேலும் வளர்ச்சி பெற அறநெறிப் பாடசாலைகள், கல்விநிலையங்கள், கோவில்கள் எல்லாம் உங்களுக்கு மேடை தரக்காத்துநிற்கின்றன. நீங்களும் நல்ல பேச்சாளர்களாக, பிரசங்கிகளாக, கலைஞர்களாக மாறலாம். முயலுங்கள்! முந்துங்கள்!

**தெய்வீகக் கலைப்பிரியர்களான இளைஞர்களுக்கு என் வாழ்த்துக்கள்!**
**"சொலல் வல்லவனை யாருமே இகல் வெல்லல் அரிது"**

**வணக்கம்.**
**அன்புடன்,**
**"செந்தமிழ்ச்செம்மல்" சின்னத்தம்பி ஸ்ரீதயாளன்,**
**மேனாள், கல்வி உதவிப்பணிப்பாளர்,**
**[யாழ்.கல்வித்திணைக்களம், தேசிய கல்விபமைச்சு]**
**கொழும்பு**



*- SRI JANANI PUBLISHERS -*
*137, Galle Road, Bambalapitiya*

**விலை ரூபா 120.00**

*Jasmine Printers - Wellawatte. 0777 309261*